நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : இடைநிலை – மேற்பிரிவு

*November 2008*

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.**

**பின்வரும் பந்தியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

## லூயி பாஸ்ட்டர் (Louis Pasteur)

லூயி பாஸ்ட்டர் (Louis Pasteur) என்பவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார். இவர் பிரான்ஸ் நாட்டின் டோல் என்னும் இடத்தில் 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார். இவர் 1847 ஆம் ஆண்டு விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றார். 1848 ஆம் ஆண்டு திழான் நகரிலுள்ள பல்கலைக்கழகம் இவரை பேராசிரியராக இணைத்துக் கொண்டது.

உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் எனப் பாஸ்ட்டர் கண்டு பிடித்தார். காற்றில் நுண்ணுயிர்கள் பல உள்ளன. அவையே அழுகல், பழுதடைதலுக்குக் காரணம் எனக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். இம்முறையைப் பயன்படுத்தி உணவைப் பாதுகாக்கும் முறை "பாஸ்ட்டர் முறை" என அழைக்கப்படுகிறது.

உணவைப் பழுதடையச் செய்யும் பக்டீரியாக்கள் (Bacteria) பெருகுவதைத் தடை செய்து உணவைப் பாதுகாக்க இம்முறை பயன்பட்டது. இது மட்டுமல்ல, கால்நடைகளுக்கு வரும் நோய் பற்றியும் ஆராய்ந்தார். கால் நடைகளுக்கு வரும் "அந்திராக்ஸ் (Anthrax)" என்னும் நோயையும் கோழிகளுக்கு வரும் "வாந்தி பேதி" என்னும் நோயையும் தடுப்பதற்கு மருந்தைக் கண்டு பிடித்து உதவினார்.

பாஸ்ட்டர் நுண்ணுயிர் தொடர்பான தமது ஆராய்ச்சியை மேலும் வளர்த்துக் கொண்டார். விசர் நாய்க்கடியினால் மக்களுக்கு உண்டாகும் பயங்கரமான நோயை ஆராயத் தொடங்கினார் அந்நோயை வராமல் தடுப்பதற்கான ஊசி மருந்தைக் கண்டு பிடித்தார். தான் கண்டு பிடித்த மருந்தை விலங்குகளுக்குச் செலுத்தி வெற்றி கண்டார்.

பாஸ்ட்டரின் கண்டு பிடிப்புகளைப் பாராட்டிப் பல நாடுகளும் பல்கலைக்கழகங்களும் நிறுவனங்களும் இவருக்குப் பல பட்டங்களும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்தன. "உறுதியும், உழைப்பும் உள்ளவனுக்கு வெற்றி திண்ணம்" என்பது பாஸ்ட்டரின் கொள்கையாகும்.

**மிகப்பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

1. லூயி பாஸ்ட்டர் எந்த நாட்டில் பிறந்தார்?

   (a) ஜேர்மனி (b) பிரான்ஸ்
   (c) இங்கிலாந்து (d) நோர்வே

2. இவர் எந்த ஆண்டில் விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்றார்?

   (a) 1840 ஆம் ஆண்டு (b) 1822 ஆம் ஆண்டு
   (c) 1848 ஆம் ஆண்டு (d) 1847 ஆம் ஆண்டு

3. இவரை பேராசிரியராக இணைத்துக் கொண்ட பல்கலைக்கழகம் எந்த நகரில் உள்ளது?

   (a) திழான் நகரில் (b) மிலான் நகரில்
   (c) பரிஸ் நகரில் (d) மசசூசெற்ஸ் நகரில்

4. உணவுப் பொருட்கள் பழுதடைவதற்குக் காரணமாய் இருப்பது எது?

   (a) பக்டீரியா (b) வெப்பம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(c) உயிர்ச்சத்து B (d) காற்று

5. உணவைப் பாதுகாக்கும் முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(a) அவித்தல் முறை (b) நுண்ணுயிர் முறை
(c) பாஸ்ட்டர் முறை (d) பக்டீரியாக்கள்

6. கால்நடைகளுக்கு வரும் நோய் என்ன?

(a) வாந்தி பேதி (b) காய்ச்சல்
(c) வாதம் (d) அந்திராக்ஸ்

7. கோழிகளுக்கு வரும் நோயின் பெயர் என்ன?

(a) சளி (b) சோர்வு
(c) வாந்தி பேதி (d) மலேரியா

8. எந்நோய்க்கான ஊசிமருந்தை லூயிபாஸ்ட்டர் கண்டு பிடித்தார்?

(a) பல்வலிக்கு (b) விசர்நாய்க்கடிக்கு
(c) காய்ச்சலுக்கு (d) இருமலுக்கு

9. லூயிபாஸ்ட்டருக்கு பட்டங்களும், பதக்கங்களும் ஏன் வழங்கப்பட்டன?

(a) விஞ்ஞானி ஆனதால் (b) கண்டு பிடிப்புகளைப் பாராட்டி
(c) பிரான்ஸ் நாட்டில் பிறந்ததால் (d) பேராசிரியராக இணைந்ததால்

10. "**உறுதியும் உழைப்பும் உள்ளவருக்கு வெற்றி திண்ணம்**" என்பது

(a) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
(b) உள்ளங்கை நெல்லிக்கனி
(c) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(d) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

**வினாக்கள் 11 - 14 : பின்வரும் இரட்டைக் கிளவிகளைப் பொருத்தமான இடங்களில் தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| (a) **(மட மட)** | (b) **(கல கல)** | (c) **(நற நற)** | (d) **(பளீர் பளீர்)** |

11. அனுமானைப் பார்த்த இராவணன் பல்லை _____________ என்று கடித்தான்.

12. இடியுடன் மழை பெய்த போது மின்னல் ______________ என்று மின்னியது.

13. அவள் தனது தோழியின் கதையைக் கேட்டு _______________ என்று சிரித்தாள்.

14. தாகத்தினால் தவித்த மாதவன் தண்ணீரை _________________ என்று குடித்தான்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 15 - 19 : இடைச்சொற்களை சரியாகப் பயன்படுத்தி வாக்கியங்களை நிறைவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| (a) **ஏனென்றால்** | (b) **எனவே** | (c) **இருப்பினும்** | (d) **அதனால்** |

15. தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கிறது. ____________________ மாணவர்கள் கவனமாகப் படிக்கிறார்கள்.

16. நாய் அணிலைத் துரத்தியது. ____________________ அதனைப் பிடிக்க முடியவில்லை.

17. சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. _________________ கண்ணன் வேலைக்கு தாமதமாக சென்றான்.

18. மாலா இன்று பாடசாலைக்கு வரவில்லை. ________________ அவளுக்கு பல் வலி.

19. பாடசாலையில் மாணவர் மன்றக் கூட்டம் இன்று இருக்கிறது. ________________ அவள் நேரத்திற்கு போக வேண்டும்.

**வினாக்கள் 20 - 23 : சொற்றொடர்களுக்கு ஏற்ற ஒரு சொல்லை தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| **(a)** **நடிகர்** | **(b)** **தலைவர்** | **(c)** **மருத்துவர்** | **(d)** **கவிஞர்** |

20. சினிமாவில் படங்களில் நடிப்பவர் ____________________.

21. கூட்டங்களிற்கு தலைமை வகிப்பவர் ____________________.

22. நோயாளிகளிற்கு மருத்துவம் பார்ப்பவர் ____________________.

23. கவிதைகளை எழுதுபவர் ____________________.

24. ஒரு குழுவின் செயற்பாடுகளின் நன்மை தீமைகளுக்கு பொறுப்பாக இருப்பவர் ________.

**வினாக்கள் 25 - 28 : சொற்றொடர்களுக்கு ஏற்ற ஒரு சொல்லை தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| **(a)** **பாகன்** | **(b)** **தபால்காரர்** | **(c)** **சிற்பி** | **(d)** **அதிபர்** |

25. பாடசாலையை கொண்டு நடத்துபவர் ____________________.

26. கடிதங்களை வீடுகளுக்கு விநியோகிப்பவர் ____________________.

27. கல்லில் சிலை செதுக்குபவர் ____________________.

28. யானையைப் பழக்குபவர் ____________________.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 29 - 32 : கோடிட்ட சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லை வைத்து பின்வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்க.**

| | | | |
|---|---|---|---|
| **(a)** விரோதிகள் | **(b)** பழைய | **(c)** சிறிய | **(d)** காயை |

29. <u>புதிய</u> வீட்டிற்கு ________________ சாமான்களை கொண்டு போகாதே.

30. <u>பெரிய</u> யானைக்கு ______________ கண்கள் இருப்பது ஆச்சரியமே.

31. <u>பழத்தை</u> உண்டவர்கள் __________________ உண்பார்களா?

32. நீண்ட நாள் <u>நண்பர்கள்</u> கருத்து வேற்றுமையால் _______________ ஆனார்கள்.

**வினாக்கள் 33 - 36 : கோடிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை வைத்து பின்வரும் வாக்கியங்களை பூர்த்தி செய்க.**

| | | | |
|---|---|---|---|
| **(a)** பெய்த | **(b)** சிரமமாக | **(c)** இலகுவான | **(d)** உதித்த |

33. கிழக்கில் _______________ கதிரவன் மாலையில் மேற்கில் மறைகிறான்.

34. ராணிக்கு சாதகமாக முடியும் என நினைத்த வழக்கு ____________ முடிந்தது.

35. கடினமான கணக்குகளை செய்த சங்கருக்கு _______________ கணக்கை செய்ய முடியாதா?

36. இரவு _______________ பெரும் மழையினால் சிட்னியில் பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

**வினாக்கள் 37 - 40 : பின்வரும் பழமொழிகளுக்கு ஏற்ற விளக்கத்தை தெரிவு செய்க.**

**விளக்கம்**
(a) இளம் வயதில் கற்கும் கல்வி கல்மேல் எழுத்துப்போல நிலைத்து நிற்கும்.
(b) எந்த ஒரு சிறிய பொருளும் ஆபத்தான நேரத்தில் உதவக் கூடும்.
(c) கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்கும் செல்வம் நாளடைவில் பெரிதாகும்.
(d) எந்தச் செயலிலும் ஊக்கத்துடன் செயற்பட்டால் வெற்றி பெறுவது நிச்சயம்.

37. சிறு துளி பெரு வெள்ளம்.

38. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

39. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.

40. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள் 41 - 45 : பின்வரும் சொற்கூட்டம் ஒவ்வொன்றிலும் ஒன்று வேறுபட்டுள்ளது. அதனைத் தெரிவு செய்க.**

41. (a) பாடசாலை (b) அதிபர் (c) மாணவர் (d) ஆசிரியர்

42. (a) குயில் (b) மயில் (c) கிளி (d) அன்னம்

43. (a) கண் (b) குரல் (c) கை (d) கால்

44. (a) புதன் (b) வெள்ளி (c) தை (d) சனி

45. (a) அப்பா (b) அக்கா (c) மாமி (d) அண்ணா

**வினாக்கள் 46 – 50 : சரியான சொல்லைத் தெரிவு செய்து வாக்கியத்தை பூர்த்தி செய்க.**

46. ஆசிரியர் மேசையின் ____________________ அகலம் இரண்டையும் எழுதச் சொன்னார்.

    (a) நீலம் (b) நிலம் (c) நீளம் (d) நேரம்

47. கவிஞர் ____________________ப் பொழுதைப்பற்றி அழகாக வர்ணித்துள்ளார்.

    (a) கலை (b) காலை (c) காளை (d) காலி

48. பாடசாலை மாணவர்கள் தமிழ்மொழி ____________________ அழகாகப் பாடினார்கள்.

    (a) வாழ்த்தை (b) வாழ்க்கையை (c) வளத்தை (d) வாழ்வை

49. ____________________யைக் கண்ட மான் பயந்து ஓடியது.

    (a) புளி (b) புரளி (c) புள்ளி (d) புலி

50. ____________________ப் பழத்தின் விலை கூடிக்கொண்டு போகிறது.

    (a) வாழை (b) வாலை (c) வலை (d) வாளி

**வினாக்கள் 51 - 55 : பின்வரும் பந்தியை வாசித்து கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதிப் பூர்த்தி செய்க.**

எல்லாக் கலை வடிவங்களைப் போல சிறுகதைத் துறையும் பல திசைகளிலும் தன்னை விரிவுபடுத்திக் கொண்டு இருக்கிறது. பொதுவாக இன்று எந்தத் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியரையும் கேட்டால் இந்த நாளில் நல்ல கதையே **(51)** ______________________________ என்பார்கள். ஆனால், போட்டி என்று **(52)** ______________________________ போதெல்லாம் கணிசமான நல்ல கதைகள் வருகின்றன. கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் **(53)** ______________________________ என்ற அமைப்பு அந்தந்த மாதம், அந்தந்த வருடம், எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகள் எனத் தேர்தெடுத்து **(54)** ______________________________ வெளியிடுகிறது. ஆனால், மாதத்துக்கு மாதம் தேர்வாளர் மாறுவதால் சிறுகதைகளின் தரம் ஒரே **(55)** ______________________________ இருப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டும் இலக்கியச் சிந்தனை தொகுப்பு அந்த ஆண்டின் சில சிறந்த முயற்சிகள் மற்றும் எழுத்தாளர்களின் அக்கறைகளைப் பதிவு செய்யத்தான் செய்கிறது.